DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.197/2024

Deposition of Witness : LW1/PW1

| Name | சாமிதுரை | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | சுந்தரமூர்த்தி | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **20.05.2025.** | | | |

( Accused Present)

சாட்சியை முத்தாண்டிக்குபப்பம் காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.ஜான்பால் Gr-I 790 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:</u>**

**1.** நான் தற்போது வல்லத்தில் வசித்து கட்டட ஒப்பந்ததாரராக பணிபுரிந்து வருகிறேன். பட்டியல் சாட்சி கௌரி எனது மனைவி பட்டியல் சாட்சி வெற்றிசெல்வன் மற்றும் தேவகுமார் எனது உறவினர்கள். ஆஜர் எதிரிகளான சத்தியமூர்த்தி, தட்சிணாமூர்த்தி, கஸ்தூரி ஆகியோர்கள் முறையே எனது அண்ணன் சேகரின் மகன்கள் மற்றும் மனைவி ஆவார்கள். 08.09.2021 அன்று காலை சுமார் 7.30 மணியளவில் நானும் எனது மனைவி கௌரியும் எனது தோட்டத்திற்கு சென்று எனது மாட்டுத் தொழுவத்தையும் மாடுகளையும் சுத்தம் செய்து மேய்ச்சலுக்கு சிறிது தூரம் ஓட்டிச் சென்று மாடுகளை விட்டுவிட்டு வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்த போது எதிரி சத்தியமூர்த்தி அவரது வீட்டு வாசல் கேட்டின் மீது நின்று கொண்டு என்னை வழிமறித்து ஏண்டா தேவடியா பையனே என்று அசிங்கமாக திட்டி உனக்கு தர வேண்டிய பணத்தை தருகிறேன் வா கணக்கு பார்த்து தருகிறேன் வா என்று அழைத்தார். அதனால் நான் அவரது வீட்டு வாசல் கேட்டில் நுழையும்போது எனது பின் பக்கத்தில் எதிரி தட்சிணாமூர்த்தி இரும்பு கம்பியால் எனது தலையின் பின் பக்கத்திலும், வலது கன்னத்திலும், வலது கையிலும் ஓங்கி அடித்து விட்டார். எதிரி சத்தியமூர்த்தி கையில் வைத்திருந்த மண்வெட்டியால் எனது தலையில் இடது பக்கத்திலும், இடது கையிலும் ஓங்கி அடித்தார். இதில் நிலை தடுமாறி நான் கீழே விழுந்து விட்டேன். கீழே விழுந்து கிடந்த என்னை எதிரி கஸ்லதூரி காலால் எட்டி உதைத்தும், தேவடியா பயனே என்று அசிங்கமாக திட்டியும், என்னை அடித்தார். நான் அலரும் சத்தம் கேட்டு எனது மனைவி கௌரி ஓடி வந்து சண்டையை விளக்கினார். மேற்படி எனது தோட்டத்தில் கட்டட பொருட்களை எடுத்து கொண்டிருந்த எனது உறவினர்களான

வெற்றிச்செல்வன், தேவக்குமார் ஆகியோர்கள் சம்பவ இடத்திற்கு வந்து என்னை பார்த்து என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகளை செய்து நெய்வேல் என்.எல்.சி பொது மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு எனக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக மேற்படி மருத்துமனையிலிருந்து கடலூர் தனியார் மருத்துவமனையான கிருஷ்ணா மருத்துவனைக்கு பரிந்துரை செய்தார்கள். அவர்களின் பரிந்துரையின் பேரில் நான் மேற்சொன்ன கிருஷ்ணா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டேன். மேற்படி மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தபோது முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய போலிசார் அங்கு வந்து என்னிடம் விசாரித்தார்கள். அவர்களிடம் நான் மேற்படி சம்பவத்தை பற்றி சொல்லி புகார் வாக்குமூலம் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் அது. அதில் உள்ள சங்கதிகளை நான் தான் சொன்னேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ -1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரி சத்தியமூர்த்தியின் உடைய திருமணத்திற்காக என்னிடம் ரூ.700000 பணத்தினை ஆஜர் எதிரிகள் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. ஆஜர் எதிரிகளுக்கும் எனக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும் நான் மற்றும் இவ்வழக்கில் சாட்சிகளாக உள்ள மற்ற நபர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு எங்கள் அனைவர் மீதும் பண்ருட்டி சார்பு நீதிமன்றத்தில் கொலை முயற்சிக்காக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்றளவும் நிலுவயில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் ஊரிலிருந்து என்.எல்.சி மருத்துவமனைக்கு செல்வதற்கு முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருக்கும்போது என்னிடம் வாக்குமூலம் பெற்ற காவலர் எந்த பணி நிலையினர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் அப்போது மயக்கத்தில் இருந்ததால் அது எனக்கு தெரியவில்லை. மேற்படி வாக்குமூலத்தினை என்னிடம் இருந்து போலிசார் எப்போது பெற்றார்கள் என்றால் 08.09.2021. மேற்படி வாக்குமூலம் பெற்றதன் பிறகு என்னை போலிசார் இது குறித்து விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் அடிப்பட்டதாக சொல்லப்படும் சமயத்தில் என் மனைவி அங்கு வந்த போது நான் சுயநினைவோடு தான் இருந்தேன். இதனை எனது போலிஸ் விசாரணையில் கூறி உள்ளேனா என்றால் இல்லை. நான் போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்த போது நான் சுயநினைவோடு இருந்தேனா என்றால் இல்லை. பட்டியல் சாட்சிகள் தேவக்குமார் மற்றும் வெற்றிசெல்வன் ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள்

சம்பவத்தை கேள்விப்பட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் சம்பவம் நடந்த போது அவர்கள் எனது தோட்டத்தில் கட்டடம் கட்டுவதற்கான பொருட்களை இறக்கி கொண்டு இருந்தனர், எனவே அப்போது சம்பவம் நடந்த சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்து விட்டனர். மேற்படி விவரத்தை எனது போலிஸ் விசாரணையில் கூறி உள்ளேனா என்றால் கூறவில்லை. நான் எதிரிகளுக்கு ரூ.50,00000 தர வேண்டியது இருந்தது என்றாலும் அதை எதிரிகள் என்னிடம் கேட்ட போது நான் தான் எதிரிகள் வீட்டிற்கு சென்று அவர்களை அடித்தேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் எனக்கும் முன்விரோதம் இருந்ததனால் எதிரிகள் மீது பொய்யாக புகாரளித்து வழக்கு பதிவு செய்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தியதாக சொல்லப்படும் மண்வெட்டி, பைப் ஆகியவற்றை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் போலிசார் அவற்றை போலிசார் கைப்பபற்றியதாக நான் மருத்துவமனையில் இருந்து திரும்பி வந்தபோது எனது ஊர்க்காரர்கள் சொல்ல தெரிந்து கொண்டேன். இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எத்தனை நபர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றால் ஒரு 6,7 பேர் இருந்திருப்பர். மேற்படி பொருட்கள் கைப்பற்றியது பற்றி போலிசாரிடம் சென்று விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**நீதிமன்ற அனுமதியின் பேரில் அரசு தரப்பில் மறுவிசாரணை**

ஆஜர் எதிரிகளுக்கும் நான் மற்றும் இவ்வழக்கில் சாட்சிகளாக உள்ள மற்ற நபர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு எங்கள் அனைவர் மீதும் மேன்மைமிகு பண்ருட்டி சார்பு நீதிமன்றத்தில் கொலை முயற்சிக்காக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்றளவும் நிலுவயில் உள்ளது என்றால் சரிதான் என்று குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள வழக்கானது இந்த வழக்கு சம்பவம் நடைபெற்று 2 மாதங்களுக்கு பின்னர் நடைபெற்றதாக சொல்லி எதிரிகளால் வழங்கப்பட்ட புகாரின் அடிப்படையில் மேற்சொன்ன மேன்மைமிகு பண்ருட்டி சார்பு நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்காகும்.

**எதிரி தரப்பில் மறு குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.197/2024

Deposition of Witness : LW2/PW2

| Name | கௌரி | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | சாமிதுரை | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **20.05.2025.** | | | |

( Accused Present)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.ஜான்பால் Gr-I 790 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:</u>**

**1.** நான் தற்போது வல்லத்தில் வசித்து குடும்ப தலைவியாக இருந்து வருகிறேன். அ.சா-1 எனது கணவர் பட்டியல் சாட்சிகள் வெற்றிசெல்வன் மற்றும் தேவக்குமார் எனது உறவினர்கள். ஆஜர் எதிரிகளும் எனது உறவினர்கள். 08.09.2021 அன்று காலை சுமார் 7.30 மணியளவில் எனது கணவர்அ.சா-1 சாமிதுரை எங்கள் மாடுகளை எங்கள் தோட்டத்திற்கு ஓட்டி சென்று அங்கு கட்டி விட்டு வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்த போது, நான் எங்கள் தோட்டத்திற்கு முன் பக்க ரோட்டில் எங்கள் கேட்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்த போது எனது கணவர் எதிரிகளின் வீட்டின் வழியாக வரும்போது எதிரிகள் தட்சிணாமூர்த்தி, சத்தியமூர்த்தி, கஸ்தூரி ஆகியோர்கள் என் கணவரை தாக்கினார்கள். அதில் எதிரி தட்சிணாமூர்த்தி இரும்பு கம்பியால் எனது கணவரின் பின் பக்க தலையிலும், வலது பக்க கன்னத்திலும், வலது கையிலும் அடித்தார் . எதிரி சத்தியமூர்த்தி மண்வெட்டியால் எனது கணவரின் தலையிலும், கன்னத்திலும், இடது கை கட்டவிரலிலும் அடித்தார். மேற்படி சத்தியமூர்த்தி, தட்சணாமூர்த்தி தாக்கியதில் என் கணவர் மயங்கி கீழே விழுந்து புரண்டு புரண்டு வந்த நிலையில் எதிரி கஸ்தூரி என் கணவரை காலால் எட்டி உதைத்தார். அவர்களை நான் என் கணவரை விடுங்கடா என்று தடுத்தேன். நான் கத்தும் சத்தம் கேட்டு எனது உறவினர்களான வெற்றிசெல்வன் மற்றும் தேவகுமார் அங்கு சம்பவ இடத்திற்கு வந்து சண்டையை விளக்கி விட்டு அடிப்பட்டு கிடந்த எனது கணவரை இரு சக்கர வாகனத்தின் மூலம் எங்கள் வீட்டிற்கு அழைத்து சென்று வெற்றிச்செல்வன் காரில் ஏற்றி நெய்வேலி என்.எல்.சி பொது மருத்துனவமனைக்கு அழைத்து சென்றார்கள். நானும் உடன் சென்றேன். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் மேற்படி சண்டையை

முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் இறங்கி நாங்களும் எனது கணவரும் தகவல் சொன்னோம். அங்கு இருந்த போலிசார் எங்களிடம் முதலில் எவ்வளவு சீக்கிரம் மருத்துவனைக்கு சென்று சிகிச்சை மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக செல்லுமாறு அறிவுறித்தினார்கள். அதனால் நாங்கள் அங்கிருந்து புறப்பட்டு நெய்வேலி என்.எல்.சி மருத்துவனைக்கு சென்று என் கணவரை சிகிச்சையில் சேர்த்தோம். மேற்படி மருத்துவமனையில் எனது கணவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிக்கைக்காக வேறு மருத்துவனையான கடலூர் கிருஷ்ணா தனியார் மருத்துவமனைகக்கு பரிந்துரை செய்ததன் பேரில் நாங்கள் அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலம் எனது கணவரை மேற்சொன்ன கிருஷ்ணா மருத்துவனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தோம். மேற்படி மருத்துவமனையில் எனது கணவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை வழங்கப்பட்டது. எனது கணவருக்கு அங்கு தலையில் ஸ்கேன் எடுக்கப்பட்டது. எனது கணவர் மேற்படி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய போலிசார் அங்கு வந்து என் கணவரை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். பின்னிட்டும் என் கணவர் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். எனது கணவருக்கு உடல்நிலை சற்று தேரியதும் மேற்படி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:

எதிரிகளுக்கும் எங்களுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக முன்விரோதம் உள்ளதா என்றால் இல்லை. எங்கள் பசங்களை போல தான் ஆஜர் எதிரிகளையும் வளர்த்தோம். சாதாரணமாக குடும்பத்திற்குள் உள்ளது போல் சிறு சிறு பிரச்சனைகள் உள்ளன அவ்வளவே. கடலூரில் அரசு பொது மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்த போது தற்போது நீதிமன்றத்தில் கூறியவற்றை தான் கூறினேனா என்றால் கூறினேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னிடம் ஏதாவது கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு எங்கோ தவறுதலாக அடிப்பட்டதை அனுசரணையாக கொண்டு பொய்யாக புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்து உள்ளோம் என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தட்சணாமூர்த்தி அவரது திருமணத்திற்காக ரூ.700000-ம், அதற்கு முன்பு ரூ.50,00000-ம் எனது கணவருக்கு பணம் கொடுத்துள்ளார்கள் என்றாலும் அது தொடர்பாக பணத்தை திருப்பி கேட்டதற்காக எனது கணவர் தான் ஆஜர் எதிரிகளை தாக்கியுள்ளார் என்றாலும் சரியல்ல. நான் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சம்பவத்தின் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு நான் வந்தேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் தான் இருந்தேன். எனது கணவர் போலிசாரிடம் புகார்

வாக்குமூலம் கொடுக்கும்போது மயக்க நிலையில் இருந்தாரா என்றால் அவர் சிறிது மயக்கம் மதெளிந்த நிலையில் கைஜாடை காண்பித்து பொறுமையாக பேசும் அளவிலான மனநிலையில் இருந்தார். என்னை போலிசார் விசாரிக்கும்போது மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்னால், எனது கணவரை காரில் ஏற்றி கொண்டு காவல் நிலையம் சென்று அங்கு நாங்கள் இருவரும் சம்பவம் நடந்தது பற்றி கூறிவிட்டு தான் மருத்துவனைக்கு சென்றோம் என்ற விவரத்தை போலிசார் என்னை விசாரிக்கும்போது கூறினேனா என்றால் கூறினேன். போலிசார் என்னை விசாரித்து கையொப்பம் பெற்ற வாக்குமூலத்தில் மேற்படி விவரங்கள் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் இந்த விவரங்கள் இருந்ததா என்று எனக்கு சரியாக நியாபகம் இல்லை. ஆனால் எனது கணவருக்கு அடிப்பட்ட சம்பவம் குறித்த விவரங்கள் அதில் இருந்தன. எனது கணவருக்கு அடிப்பட்டதனை அனுசரணையாக கொண்டு வழக்கிற்காக ஆஜர் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.197/2024

Deposition of Witness : LW3/PW3

| Name | வெற்றிசெல்வன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | காசிநாதன் | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **20.05.2025.** | | | |

( Accused Present)

சாட்சியை முத்தாண்டிக்குபப்பம் காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.ஜான்பால் Gr-I 790 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது வல்லத்தில் வசித்து கட்டிட ஒப்பந்ததாரராக பணி புரிந்து வருகிறேன். அ.சா.-1 சாமிதுரை அ.சா-2 கெளரி மற்றும் பட்டியல் சாட்சி தேவக்குமார் மற்றும் ஆஜர் எதிரிகளும் எனது உறவினர்கள். கடந்த 08.09.2021 அன்று காலை சுமார் 7.30 மணியளவில் நானும் எனது உறவினரான தேவக்குமாரும் எனது மாமா சமிதுரையின் தோட்டத்திற்கு சென்று கட்டட பொருட்கள் எடுத்து கொண்டிருந்த போது எனது மற்றொரு மாமாவான சேகர் என்பவரின் மகன்களான தட்சணாமூர்த்தி மற்றும் சத்திமூர்த்தி ஆகியோர்களின் வீட்டிலிருந்து சத்தம் கேட்டு நாங்கள் அங்கு சென்று பார்த்த போது தட்சணாமூர்த்தி இரும்பு கம்பியால் எனது மாமா சாமிதுரையின் தலையின் பின் பக்கத்திலும், வலது கன்னத்திலும், வலது கையிலும் அடித்தார். எதிரி சததியமூர்த்தி மண்வெட்டியால் எனது மாமா சாமிதுரையின் தலையின் இடது பக்கத்திலும், இடது கை கட்ட விரலிலும் அடித்தார். அப்போது எனது மாமா சாமிதுரை மயங்கி கீழே விழுந்தார். அப்போது எதிரி கஸ்தூரி எனது மாமா சாமிதுரையை காலால் எட்டி உதைத்தார். மேற்படி சண்டையை பார்த்த நானும் தேவக்குமாரும் எனது அத்தை கௌரியும் சண்டையை விலக்கி விட்டோம். அடிப்பட்டு மயக்க நிலையில் கிடந்த எனது மாமா சாமிதுரையை நாங்கள் இருசக்கர வாகனத்தில் ஏற்றி வீ்டு வரை சென்று அங்கு எனது காரில் மாற்றி அதன் மூலம் மருத்துனவமனைக்கு செல்லும் வழியில் முத்தாண்டிக்குபப்பம் காவல் நிலையத்தில் இறங்கி நாங்கள் சண்டை பற்றிய தகவல் சொன்னோம். மேற்படி காவல் நிலையத்தில இருந்த போலிசார் எங்களை முதலில் அடிப்பட்டவரை மருத்துனவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்க்குமாறு சொன்னதால் அங்கிருந்து உடன் புறப்பட்டு மேற்சொன்ன காரின் மூலம்

நெய்வேலி என்.எல்.சி மருத்துவனைக்கு அழைத்து சென்றோம். மேற்படி மருத்துனவமனையில் முதலுதவி சிகிக்சை அளிக்கப்பட்டு அங்கிருந்த மருத்துவர் மேல்சிகிக்கைக்காக தனியார் மருத்துனவமனைக்கு பரிந்துரை செய்ததன் பேரில் நாங்கள் எனது மாமா சாமிதுரையை கடலூரில் உள்ள தனியார் மருத்துவமனையான கிருஷ்ணா மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். மேற்படி மருத்துவமனையில் அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. எனது மாமா சாமிதுரை மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய போலிசார் மேற்படி மருத்துவனைக்கு வந்து என் மாமா சாமிதுரையிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சாமிதுரையிடம் தான் எனது பணிக்கு தேவையான பொருட்களை வியாபார ரீதியாக வாங்கி வருகிறேன் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் அன்று சம்பவம் நடக்கும் நேரத்தில் எவ்வளவு தொலைவு இடைவெளியில் இருந்தேன் என்றால் 100 மீ தொலைவில் இருந்தேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவே இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, சம்பவத்தை நேரில் பார்த்தேன். சாட்சி மீண்டும் தானாக முன்வந்து மேலே எனது குறுக்கு விசாரணையில் நான் சம்பவம் நடக்கும் போது சம்பவ இடத்தில் இருந்து 100 அடி தொலைவில் இருந்தேன் என்று சொல்கிறார். சாமிதுரைக்கும் ஆஜர் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது என்றால முன்விரோதம் இல்லை ஆனால் கொடுக்கல் வாங்கல் மட்டும் இருந்தது. நான் சாமிதுரையிடம் தான் எனது பணிக்கு தேவையான பொருட்களை வியாபார ரீதியாக வாங்கி வருகிறேன் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.197/2024

Deposition of Witness : LW4/PW4

| Name | தேவக்குமார் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | சரவணன் | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **20.05.2025.** | | | |

( Accused Present)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.ஜான்பால் Gr-I 790 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:</u>**

நான் தற்போது வல்லம் கிராமத்தில் வசித்து Fitter வேலை செய்து வருகிறேன். அ.சா-1 முதல் அ.சா-3 வரையிலானவர்களும் ஆஜர் எதிரிகளும் எனது உறவினர்கள். கடந்த 08.09.2021 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் நானும் வெற்றிசெல்வன்-ம் கட்டட வேலைக்கு தேவையான பொருட்களை சாமிதுரை தோட்டத்தில் எடுப்பதற்காக அங்கு சென்று பொருட்கள் எடுத்து கொண்டிருந்த போது நாங்கள் இருக்கும் தோட்டத்தில் இருந்து 100 அடி தொலைவில் உள்ள தட்சணாமூர்த்தி வீட்டிலிருந்து சத்தம் கேட்டு நானும் வெற்றிச்செல்வன்-ம் அங்கு சென்று பார்த்த போது எதிரி சத்தியமூர்த்தி மண்வெட்டியால் சாமிதுரையின் தலையின் இடது பக்கத்திலும், இடது கை கட்ட விரலிலும் அடித்தார். எதிரி தட்சணாமூர்த்தி இரும்பு கம்பியால் சாமிதுரையின் தலையின் பின்புறமும், வலது கையிலும், வலது கன்னத்திலும் அடித்தார். தட்சணாமூர்த்தி மற்றும் சத்திமூர்த்தி அம்மாவான எதிரி கஸ்தூரி சாமிதுரையை அசிங்கமாக திட்டி காலால் எட்டி உதைத்தார். நானும் வெற்றிச்செல்வனும் சண்டையை விலக்கி விட்டு அடிப்பட்ட சாமிதுரையை நெய்வேலி என்.எல்.சி மருத்துவனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். மேற்படி சண்டையை சாமிதுரையின் மனைவி கௌரியும் நேரில் பார்த்தார். மேற்படி என்.எல்.சி மருத்துவமனையில் சாமிதுரைக்கு சிகிச்சை வழங்கப்பட்டு அவரது நிலைமை மோசமாக இருப்பதாக சொல்லி தனியார் மருத்துவனைக்கு பரிந்துரை செய்ததன் பேரில் நாங்கள் சாமிதுரையை மேல்சிகிச்சைக்காக கடலூர் கிருஷ்ணா தனியார் மருத்துனவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தோம். நாங்கள் என்.எல்,சி மருத்துனவமனைக்கு சிகிச்சைக்கு செல்லும் வழியில் முதலில் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் இறங்கி சண்டையை பற்றி தகவல் சொன்ன போது அங்கிருந்த போலிசார் முதலில்

எங்களை அடிப்பட்டவரை மருத்துகவமனையில் சிகிச்சையில் சேர்க்குமாறு சொன்னதால் நாங்கள் உடனே புறப்பட்டு என்.எல்.சி அரசு பொது மருத்துவமனைக்கு சென்று சாமிதுரையை சிகிச்சையில் சேர்த்தோம். நாங்கள் சாமிதுரையை கிருஷ்ணா மருத்துவமனையில் சேர்த்து விட்டு அங்ு்கு இருந்த போது முத்தாண்டிக்குபப்பம் காவல் நிலைய போலிசார் அங்கு வந்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் சத்தம் கேட்டு வழக்கு சம்பவத்தை அருகில் இருந்து பார்த்தேன். சாமிதுரை, கௌரி ஆகியோர் எனது உறவினர்கள் என்பதனால் அவர்களுக்கு ஆதரவாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை இல்லை.**